**செய்தி வெளியீடு எண்:896** **நாள்:21.11.2020**

**இன்று (21.11.2020), சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள் தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்கத்தை மக்களுக்கு அர்ப்பணித்து, சென்னை மெட்ரோ ரெயில் திட்டம்–II மற்றும் பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:**

மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

**கண்ணன் கோட்டை, தேர்வாய்கண்டிகை நீர்த் தேக்கத்தினை மக்களுக்கு அர்ப்பணித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம், கட்டம்–2, கோவை மாநகரில் அவிநாசி சாலையில் உயர்மட்ட சாலை, கரூர் மாவட்டம், நஞ்சை புகளூரில் தடுப்பணை, நந்தம்பாக்கம் வர்த்தக மைய விரிவாக்கம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் ஆகிய திட்டங்களை 67,758 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றிட அடிக்கல் நாட்டி, விழா பேருரை ஆற்றவிருக்கும் மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்களே!**

**I warmly welcome Union Home Minister Shri. Amit Shah Ji** அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்புரை வழங்கிய
மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் **திரு.ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அண்ணன் **திரு. ப. தனபால்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சகோதரர் **திரு. எம்.சி. சம்பத்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற
பாரதீய ஜனதா கட்சியினுடைய பொறுப்பாளர்களே!
தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களே!
புதிய நீதிக் கட்சியினுடைய தலைவர் அவர்களே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் **திரு.க.சண்முகம்** அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள தொழில்துறை முதன்மைச் செயலாளர்
**திரு. முருகானந்தம்** அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மத்திய மற்றும் மாநில அரசின் உயர் அலுவலர்களே!

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

வாரியத் தலைவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் வழியில் வந்த எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, **அமைதி, வளம், வளர்ச்சி** என்ற முப்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில், நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியின் பயனை அனைத்து தரப்பு மக்களும் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி, செயல்படுத்தி வருகின்றது. இதனால்தான், தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் அளப்பரிய முன்னேற்றம் கண்டு, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

Tamil Nadu, has been a pioneer, in the construction of system tanks and effective water management, since early Chola period.

Hon'ble Amma accorded top priority for water management and implemented Rain Water Harvesting as a people's movement.

Continuing her legacy, several schemes like Kudimaramathu, Check Dams etc., are taken up in a big way across the State.

Sir, I am happy to reveal that under Kudimaramathu Scheme 6,278 Tanks and water bodies were renovated at a total cost of 1,433 crore rupees with people's participation.

Further, 5,186 Minor Irrigation Tanks and 25,987 Ponds and Ooranies in rural areas were also renovated at a total cost of 805 crore rupees by Rural Development and Panchayat Raj Department.

This has largely augmented our water storage capacity.

To ramp up the water conservation efforts and increase the collective storage capacity of irrigation tanks and water bodies, Hon'ble Amma's Government launched **"Tamil Nadu Water Resources Conservation and Augmentation Mission"** in 2019.

Moreover, to prevent rain water from draining unnecessarily into the sea and to ensure its availability for drinking water, agriculture needs and for ground water recharge, I have sanctioned 1,000 crore rupees for construction of check dams across rivers and streams over a period of three years.

In the last two years, 160 check dams have been constructed by Public Works Department and many more are being constructed.

Further, 42,635 small Check Dams were constructed at a cost of 959 crore rupees by Rural Development and Panchayat Raj Department.

These initiatives yielded tremendous results with significant increase in ground water level and water storage, thereby increasing the crop coverage area.

The widespread rains during South-West and the current North-East monsoon periods have greatly improved the storage level in all the water bodies which were renovated in the last four years.

Due to the meticulous planning in the desilting of channels in the delta area, after I opened the shutters of Mettur Dam for Kuruvai cultivation on June $12^{th}$, the water reached the tail end areas 10 days earlier than usual.

This had a major impact wherein the delta farmers have brought 4.12 lakh acres under cultivation breaking a 30 year old record.

Due to this, Tamil Nadu has achieved a record procurement of 32 Lakh MT of paddy.

புதிய வீராணம் திட்டத்தினை செயல்படுத்தி சென்னை மக்களின் தாகத்தை தீர்த்து வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கண்ணன் கோட்டை தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்தினை அமைத்து, சென்னையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டமிட்ட மாண்புமிகு அம்மாவின் கனவை, மாண்புமிகு அம்மாவின் அரசு **380** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தி தற்போது நனவாக்கியுள்ளது.

I thank the Hon'ble Home Minister for dedicating this scheme to the people of Chennai.

தமிழக மக்களின் கனவுத் திட்டங்களான **காவேரி – குண்டாறு இணைப்புத் திட்டம், அத்திக்கடவு – அவிநாசி திட்டம், மேட்டூர் அணை –சரபங்கா வடிநில நீரேற்றுத் திட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் –குமாரமங்கலத்தில் கதவணை** என பல்வேறு நீர்வள ஆதாரத் திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு தான். தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்களைச்

சிறப்பாக செயல்படுத்தியதன் மூலம், இன்று தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. வரும் பருவமழைக் காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் மேலும் அதிக அளவு உயர வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**மேற்கண்ட முயற்சிகளால்தான், மத்திய அரசு 2019–2020ஆம் ஆண்டிற்கான நீர் மேலாண்மைத் திட்டங்களை இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்து, தேசிய விருது வழங்கியுள்ளது.**

The initiatives in Water Management and conservation was recognized by the Ministry of Jal Sakthi, Government of India and recently Tamil Nadu was awarded the First Place in the country for the year 2019-2020.

கரூர் மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காவேரி ஆற்றின் குறுக்கே நஞ்சை புகளூரில் 1,140 மீட்டர் நீளத்திற்கும், 3 மீட்டர் உயரத்திற்கும், 406 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை அமைக்க இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 0.8 டிஎம்சி தண்ணீரை சேமிப்பதோடு, 4,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

Respected Sir, I request you to consider extending necessary support for speedy approval of the important projects initiated by the State Government, like **Nadanthai Vazhi Cauvery, Godavari-Cauvery river linking, Cauvery-Vaigai-Gundar river Linking etc.,** which are pending approval by Government of India.

In this regard, I am submitting a Memorandum to you Sir.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகரத்தை உலகத் தரத்துக்கு இணையாக மேம்படுத்த பல்வேறு துறைகளின் சார்பில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும், மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை

நிறைவேற்றுகின்ற வகையில், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

54 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டம்-1, தற்போது சென்னை பெருநகர் பகுதியில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலுக்கு போதாது என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 61 ஆயிரத்து 843 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.90 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த முடிவு செய்தது. இந்த இரண்டாம் கட்டத்தில் மாதவரம் முதல் சிப்காட் வரையில் ஒரு வழித்தடமும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை ஒரு வழித்தடமும், மாதவரம் முதல் ஆலந்தூர் வழியாக சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும் உள்ளது. மேற்கண்ட அனைத்து வழித்தடங்களும் அமைப்பதற்கு வெளிநாட்டு நிதி உதவி இறுதி செய்யப்பட்டுள்ளது.

The Phase-I of Chennai Metro Rail Limited has been a successful joint venture of the Government of India and Government of Tamil Nadu with equal equity participation.

**Therefore, I request the Hon'ble Union Home Minister to facilitate sanction of Phase-II of Chennai Metro Rail Project at an estimated cost of 61,843 Crore rupees under 50:50 joint venture partnership basis between Government of India and Government of Tamil Nadu, as was done for Phase-I.**

சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இன்று அடிக்கல் நாட்டப்பட்ட, கோயம்புத்தூர் மாநகர், அவிநாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்ட சாலை வழித்தடம் அமையவுள்ள சாலையானது, கோயம்புத்தூர் மாநகருக்கு மிக முக்கியமான சாலையாகும். இச்சாலையில் பல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் விமான நிலையம் அமைந்துள்ளதால் எப்போதும் போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது. எனவே, இந்த உயர்மட்ட சாலை வழித்தடம்

அமைந்தால் போக்குவரத்து நெரிசல் மிகவும் குறையும். இத்திட்டத்திற்கு 1,621 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

Sir, Tamil Nadu is the most favoured destination for investments in the country.

I am happy to inform that my Government has signed 55 MoUs in the current financial year, with an investment of 40,719 crore rupees, providing employment of over 65,000 persons.

The fact that this was achieved during the COVID pandemic makes it extra special.

கொரோனா தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், தமிழ்நாடு மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வண்ணம் கவனத்துடன் ஊரடங்கை அமலாக்குவதிலும் தமிழ்நாடு அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கோரஸ் (CORUS – COVID Relief and Upliftment Scheme) என்ற புதுமையான திட்டத்தை செயல்படுத்தி, இதுவரை 1,202 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 138 கோடி ரூபாய் அளவிற்கு பிணையில்லா கடன்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

I must congratulate and thank the Central Government for kick-starting the national economic recovery through multiple stimulus packages.

Tamil Nadu benefited immensely from the steps taken by Government of India for post COVID economic recovery. I am happy to inform the Hon'ble Home Minister, that Tamil Nadu stands second in the country in providing assistance under the **'Emergency Credit Line Guarantee Scheme'**.

The Public Sector Banks in Tamil Nadu have disbursed loans amounting to 6,980 crore Rupees so far, under this scheme.

Indian Oil Corporation's POL terminal, Integrated Lube Complex and captive jetty at Kamarajar Port at a cost of 3,200 crore rupees will contribute significantly to the energy security of the State.

The expansion of Chennai Trade Centre at a cost of 309 crore rupees will add over 20,000 square metres of additional convention space to Chennai City and will help to position the City as a destination for global conventions and conferences.

It will also contribute towards business development and export promotion.

At this juncture, I would like to inform you that various measures were taken by the Hon'ble Amma's Government in controlling the spread of COVID 19 pandemic successfully.

Out of 7,66,677 persons tested positive as on date, only 13,400 are active cases in the state.

The positive cases per day has reduced much from about 6,000 per day to less than 1,600 now.

It is because of these proactive steps, the Hon'ble Prime Minister commended the efforts of the Tamil Nadu Government.

தமிழ்நாட்டில் கொரோனா பரவல் குறைந்து வரும் சூழல் நீடிக்கவும், அதனை முழுமையாகத் தடுக்கவும் நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

இன்று திறந்து வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களை, முழுமையாக நிறைவேற்ற அல்லும் பகலும் அயராது உழைத்த அனைத்து அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், உழைப்பாளர் நண்பர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு கழகத்தினுடைய துணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கடுமையான, சோதனையான இந்தத் தருணத்தில் நாட்டு மக்களின் ஒத்துழைப்போடு மிகத் திறமையாக, வல்லரசு நாடுகளே பாராட்டுகின்ற அளவிற்கு ஆட்சி செய்வதை நாம் பார்க்கின்றோம். உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு அல்லும் பகலும் பாராமல் உழைத்து, கடுமையாக முயற்சி செய்து வருகிறார் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள். ஆகவே, அவர்களுடைய கடுமையான முயற்சிக்கு தமிழகம் எப்பொழுதும் துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மத்திய உள் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு.அமித் ஷா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு துணையாக இருந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் போடுகின்ற திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வல்லரசு நாடுகளில் இந்தியாவும் இடம் பெறுகின்ற அளவிற்கு வளர்ந்து வருகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். ஆகவே, வல்லரசு நாடுகள் பாராட்டுகின்ற அளவிற்கு இந்தியா வளர்ந்திருக்கிறதென்று சொன்னால், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களும், மாண்புமிகு உள் துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்களும் எடுத்த முயற்சிகள்தான் காரணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நாடாளுமன்றத் தேர்தலில் அமைக்கப்பட்ட கூட்டணி தொடரும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 10 ஆண்டு காலம் சிறப்பான ஆட்சி செய்திருக்கிறது, பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்திருக்கிறது, தேசிய அளவில் பல்வேறு விருதுகளை நாங்கள் பெற்றிருக்கின்றோம், அனைத்துத் துறைகளிலும் விருதுகளை குவித்துக் கொண்டிருக்கின்றோம். அந்தளவிற்கு சிறப்பான ஆட்சி இப்போது தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீண்டும், வருகின்ற 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் எங்களுடைய கூட்டணி அதிக இடங்களில், பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று கழக ஆட்சி அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களின் அழைப்பினை ஏற்று தமிழகத்திற்கு வருகை தந்து முடிவுற்ற பணியை திறந்து வைத்தும், பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாக மனமார்ந்த, எனது சார்பாக மனமாந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

On behalf of the people of Tamil Nadu, I thank the Hon'ble Union Minister Thiru. Amit Shah Ji for having accepted our invitation and graced the function.

இந்த விழாவை சிறப்புற நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**